ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2445/02 - 2025 ජූලි මස 14 වැනි සඳුදා - 2025.07.14

*2445/02 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2021 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

**பிரிவு 53 இன் கீழ் கட்டளை**

2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53 ஆல் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பயனால் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில், இந்த கட்டளை மூலம் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுகின்றேன் -

(அ) அமைச்சரவை, 2025.07.01 ஆம் திகதியிட்ட 25/1123/804/135 ஆம் இலக்க அதன் தீர்மானத்தின் மூலம், அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நபரின் வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக நியமிப்பதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

(ஆ) அத்தகைய வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாகக் கருத்தில் கொள்வதற்கான காரணம் இங்கே அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படும் விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இங்கே அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும், மற்றும

1A - PG 7201 — 312 (2025/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஈ) குறிப்பிடப்பட்ட சட்டங்களின் கீழ் வழங்கப்படும் விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள், இதற்கான அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் தொடங்கி செயல்படுவதை நிறுத்தும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2025, யுலை 12.*

| அட்டவணை I செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம்-தீர்வையற்ற தொழிற்பாடுகளாக நியமிக்கப்பட்ட வியாபாரத்தின் விபரங்கள | |
|---|---|
| 1.அங்கீகரிக்கப்பட்ட நபரின் பெயர | **சிலோன் ரியல் எஸ்டேட் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடட** |
| 2.உரிம இலக்கம | 2403190053 |
| 3.உரிமம் வழங்கப்பட்ட திகதி | 2024, மே 03<br>வியாபாரம் ஆரம்பிக்கின்ற திகதி உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டும் (2022 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட நபர்களைப் பதிவு செய்தல், உரிமம் வழங்குதல், அங்கீகாரம் வழங்குதல் மற்றும் ஏனைய அங்கீகாகரங்கள் என்பவற்றிற்காக ஒழுங்குவிதிகளின் 27ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும்) |
| 4.கரைகடந்த கம்பனி பதிவிலக்கம | PCC00298023 |
| 5.செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபார வகைப்படுத்தல | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரம |
| 6.விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களுக்கான தகவுடமை | **சிலோன் ரியல் எஸ்டேட் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட** என்பது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரம் ஒன்றாக மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளது - செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக எச்சந்தர்ப்பத்திலும் நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறமாட்டாது. |
| 7.தகைமை தகுதிவிதி | 2023, ஒகத்து 04ஆம் திகதியுடைய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 2(அ) ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட தகுதிவிதிகள |
| 8.ஏற்புடைய விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் திட்டம | 2023ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 3(1)(அ) ஒழுங்குவிதியில் குறிப்பிட்ட திட்டம |
| 9. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரம் செல்லுபடியான தன்மைக்கான நிபந்தனைகள | இந்த வர்த்தமானி வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஆறு (06) மாதங்களுக்குள், மேலே உள்ள அங்கீகரிக்கப்பட்ட நபர் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுடன் 01-02-01 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டத்துக்கான காணி குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தவறினால், செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபார நிலை செல்லுபடியற்றதாக மாறும். |

## அட்டவணை II

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமாக கருத்தில் கொள்ளப்படுவதற்கான காரணம்

*கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் சட்டம் பிரிவு 53(5) இல் கூறப்பட்டுள்ளவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை இஸ்தாபிப்பதன் வெற்றியை உறுதி செய்வதற்காக வியாபாரங்களை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகமாக நியமிப்பதில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.*

*சிலோன் ரியல் எஸ்டேட் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டது என்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட நபர் என்பதோடு எல்ஓஎல்சீ ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் செயல்நுணுக்க முதலீட்டுப் பிரிவான பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பிஎல்சியின் ஒரு துணை நிறுவனமாகும். பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஓய்வு, விவசாயம், பயிர்ச்செய்கை, நிர்மாணம் மற்றும் அசையாத ஆதனம் போன்ற துறைகளில் இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் விரிவான முதலீடுகளைக் கொண்டுள்ளது, இது சிலோன் ரியல் எஸ்டேட் ஹோல்டிங்ஸின் முயற்சிகளுக்கு உறுதியான அடித்தளத்தை வழங்குகிறது.*

*சிலோன் ரியல் எஸ்டேட் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் 1-02-01 கலப்பு-பயன்பாட்டு காணித்துண்டத்தில் 30,629.92 சதுர மீற்றர் விஸ்தீரணத்தில் ஒரு வியாபார மற்றும் வர்த்தக நகர வளவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

*சிலோன் ரியல் எஸ்டேட் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட், நிர்மாணிப்புச் செலவுகளுக்காக சுமார் ஐஅடொ 320,401,000 ஆரம்ப ஒதுக்கீட்டையும், சாத்தியக்கூறு மற்றும் வடிவமைப்பு ஆலோசனை, கருத்திட்ட முகாமை கட்டணங்கள், தற்செயல் செலவு, முற்பணம் மற்றும் தரகு கட்டணங்கள் மற்றும் வட்டி உள்ளிட்ட ஏனைய செலவுகளுக்காக ஐஅடொ 90,618,000 மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீட்டிலிருந்து கொழும்புத் துறைமுக நகரத்தில் காணி முதலீட்டிற்காக 32,155,846,800 ரூபா தொகையையும் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது.*

*துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்திற்குள் (SEZ) உள்ள இந்த முதன்மைத் திட்டம், 53,602 சதுர மீற்றர் A தரத்திலான அலுவலக இடத்தையும், 22,972 சதுர மீற்றர் சில்லறை கருப்பொருள் மையப்படுத்தப்பட்ட வணிக இடத்தையும், 84,232 சதுர மீற்றர் உயர்நிலை குடியிருப்பு இடத்தையும் உள்ளடக்கும். இந்தத் திட்டத்திற்குள் உள்ள அலுவலக இடங்கள் 4,000 - 6,000 தனிநபர்களுக்கு இடமளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நிதி, தகவல் தொழில்நுட்பம், தளவாடங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்கும். நிதி, தகவல் தொழில்நுட்பம், பொறியியல், எரிசக்தி தளவாடங்கள் மற்றும் ஆலோசனை சேவைகள் போன்ற தொழில்களை ஈர்ப்பதற்காக இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உள்நாட்டு மக்களுக்கு கணிசமான வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. மேலும், தீர்வையற்ற பொருள் கொள்வனவு நிலையம் மற்றும் உயர்நிலை குடியிருப்பு அலகுகள் சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்கும் வெளிநாட்டு நாணய வருகையை உருவாக்கும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் மற்றும் வெளிநாட்டு நாணய வருவாயுடன் உள்நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும்.*

*இந்த கலப்பு-பயன்பாட்டு கட்டிட மேம்பாடு கொழும்புத் துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்தின் செயல்நுணுக்க தொலைநோக்கிற்கு மையமாக உள்ளது. இது இலங்கையின் நிதி சேவைத் துறைகளை மேம்படுத்துவதிலும் தொடர்புடைய தொழில்களை கொழும்புத் துறைமுக நகரத்திற்கு ஈர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது. இந்த திட்டம் கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் ஒரு சர்வதேச நிதி நிலையத்தை உருவாக்குவதற்கான ஒரு உந்துதலாகும். இது இலங்கையில் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.*

*அட்டவணை III*

*சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள*

| *கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள* | *வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள* |
|---|---|
| 1. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | (அ) அனைத்து வருமானமும், இலாபங்கள் மற்றும் பகிர்ந்தளிக்கப்படுகின்ற பங்கிலாபங்கள் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இந்த சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படும்.<br><br>(ஆ) மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துக் கொடுப்பனவுகளும் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இந்த சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்திவைத்தல் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.<br><br>(இ) மேற்கூறிய இருபத்தைந்து ஆண்டு காலம் முடிவடைந்த பிறகு, இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையில் உள்ள நிறுவன வரி விகிதத்தில் இருந்து 50% ஊக்குவிப்புகள் பத்து வருட காலத்திற்கு வழங்கப்படும். |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டம | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிச் சட்டம | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 5. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 6. சுங்க கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 7. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 9. 1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க பந்தயம் மற்றும் விளையாட்டு அறவீட்டுச் சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட மாட்டாது. |

| கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள | வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள |
|---|---|
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும |
| 11. கேளிக்கை வரி கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 267) | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்படமாட்டாது |
| 12. 2017ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம | 2022 யூன் 3 ஆம் திகதியுடைய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டு நாணய மாற்றல் (கொழும்புத் துறைமுக நகரத்தில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 13. 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கெசினோ வியாபார (ஒழுங்கு விதி) சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்படமாட்டாது |

**அட்டவணை IV வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலம**

| | கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள | ஆரம்பிக்கின்ற திகதி | முடிவடைகின்ற திகதி |
|---|---|---|---|
| 1. | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2025 யூலை 14 | 2060 யூலை 13 |
| 2. | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம | 2025 யூலை 14 | 2050 யூலை 13 |
| 3. | 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2025 யூலை 14 | 2050 யூலை 13 |
| 4. | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம | 2025 யூலை 14 | 2050 யூலை 13 |
| 5. | 1989ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2025 யூலை 14 | 2050 யூலை 13 |
| 6. | சுங்க கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 235) | 2025 யூலை 14 | 2050 யூலை 13 |
| 7. | 2011ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | 2025 யூலை 14 | 2050 யூலை 13 |
| 8. | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2025 யூலை 14 | 2050 யூலை 13 |
| 9. | 1988ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் விளையாட்டு அறவீட்டுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. | 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2025 யூலை 14 | 2050 யூலை 13 |
| 11. | கேளிக்கை வரி கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 267) | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. | 2017ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம | 2025 யூலை 14 | 2050 யூலை 13 |
| 13. | 2010ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கெசினோ வியாபார (ஒழுங்குவிதி) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 07-0146

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.